Registered as a Newspaper

சுவைமிக்க உஸ்வத்தை
சண்டோஸ் தயாரிப்பு
களுக்கு விஜயம்செய்யுங்கள்
பெட்டா
எசன்ஸ்
சப்பிளையர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை: ரூ 1-25

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சிறு கைத்தொழில்களுக்கு
ஏற்ற மூலப்பொருள்களை
மலிவாகப்
பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் முதன்மை
பெறும் ஸ்தாபனம்
பெட்டா
எசன்ஸ்
சப்பிளையர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 8 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 துல்ஹஜ் பிறை 27 (24 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 205

ஆணைக்குழு விசாரணை நேற்று ஆரம்பம்

# அதிசக்தி வாய்ந்த ஷெல்லே ஆஸ்பத்திரியைத் தாக்கியது



ஆணையாளர் அலஸ், ஆஸ்பத்திரியில் விழுந்து வெடித்த 'ஷெல்'லின் மிஞ்சிய ஒரு பாகத்தைப் பார்வையிடுகிறார். அருகில் யாழ் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் திரு. எஸ். நச்சினார்க்கினியன்.
(படம்: சண். ஜோண்சன்)

## சேதமுற்ற வார்ட்டைப் பார்த்த ஆணையாளர் அலஸ் கருத்து

— ந. வித்தியாதரன், சண். ஜோண்சன், எம். பேரின்பநாயகம் —

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். ஆஸ்பத்திரி சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட தனி நபர் ஆணைக்குழுவின் ஆணையாளர் முன்னாள் நீதியரசர் ஏ. ஸி. அலஸ் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

தனது விசாரணைகளை நேற்றே ஆரம்பித்த திரு. அலஸ், யாழ் ஆஸ்பத்திரிக் கட்டடங்களுக்கு ஷெல் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டார்.

"யாழ் ஆஸ்பத்திரியின் 19ஆம் வார்ட்டைத் தாக்கிய ஷெல் குண்டு அதிக சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும் இந்த வார்ட் முற்றாகச் சேதமடைந்திருக்கின்றது பல உயிர்களை இந்த ஷெல் குண்டு பறித்திருக்கிறது. இதில் இரண்டு பட்ட கருத்துக்கு இடமில்லை" இப்படி அவர் கூறினார்

யாழ். ஆஸ்பத்திரியைப் பார்வையிட்ட சமயம், யாழ் ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் டாக்டர் எஸ் நச்சினார்க்கினியனிடம் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார் அவ்வேளை உதயன் பிரதிநிதி அருகில் நின்றார்.

திரு. அலஸ் நேற்றுக் காலையில் விமானம் மூலம் பலாலி வந்து சேர்ந்தார் பின்னர் அங்கிருந்து ஹெலிக்கொப்டரில் புறப்பட்டு யாழ் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்.

இடைவழியில் யாழ் ஆஸ்பத்திரிக்கும், கோட்டை முகாமிற்கும் இடையில் உள்ள தூரம் மற்றும் திசைகள் பற்றிய விவரங்களை அவர் ஹெலிக்கொப்டரிலிருந்து நோட்டமிட்டார்.

அதன் பின்னர் திரு. அலஸ் மீண்டும் ஹெலிக்கொப்டர் மூலம் பலாலி திரும்பினார்.

அங்கு அவருக்காகக் காத்திருந்த அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் அவரை வரவேற்று காரில் யாழ்நகரிற்கு அழைத்து வந்தார்.

காலை 10 30 மணிக்கு யாழ் ஞானம்ஸ் ஹோட்டலுக்கு வந்த திரு. அலஸ், அங்கிருந்து நேரடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம், தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோர் சகிதம் சென்றார்.

வைத்தியப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் அவரை வரவேற்று ஆஸ்பத்திரிச் சேதங்களைச் சுற்றிக்காட்டினார்.

தாக்குதல் சம்பவங்கள் பற்றிய விவரங்களை

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வந்த திசையை அறிவதில் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ் ஆஸ்பத்திரியின் 19 ஆம் வார்ட்டைத் தாக்கி ஒன்பது உயிர்களைப் பலிகொண்ட அந்தப் பயங்கர ஷெல்குண்டு எந்தத் திசையிலிருந்து ஏவி விடப்பட்டது?

இதனை நேரடியாக ஆராய்ந்து அறிவதில் ஆணையாளர் அலஸ் அதிக கவனம் செலுத்தியதை நேற்றுக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த ஷெல்குண்டு முதலாவது மாடியின் கூரையையும் பின்னர் முதல் மாடியின் கீழ் கொங்கிறீட் தளத்தையும் துளைத்திருந்ததல்லவா?

அவற்றை அவர் "குளோசப்பில்" படம் பிடிக்குமாறு பணித்தார்.

இரண்டு துவாரங்களும் செங்குத்தாக கீழ் நேர்கோட்டில் இருக்கவில்லை.

செங்குத்தாகப் பார்க்கையில் கூரைத்துவாரத்தில் இருந்து சுமார் 9 அடி தூரத்தில் கொங்கிறீட் தளத்தில் ஏற்பட்ட துவாரம காணப்பட்டது.

இந்தத் துவாரத்தை அவர் அளந்து குறித்தார்.

இரண்டு துவாரத்தையும் வைத்துக்கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பதிலளிக்க மறுத்த ஆணையாளர்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

திரு. அலஸ் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவோ, பேட்டியளிக்கவோ மறுத்துவிட்டார்.

நேற்று யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அவர் வந்துசேர்ந்தவுடன் அவரைப் பத்திரிகையாளர்கள் சூழ்ந்து கொண்டபோது அவர் இப்படி மறுப்புத் தெரிவித்தார்.

அவர் சுருக்கமாகப் பதிலளிக்கையில்—

எனது விஜயத்தைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கு இல்லை. கொழும்பில் விசாரணைகள் மூடிய அறையிலேயே (In Camera) நடைபெற்றன. இனியும் அப்படித்தான் நடக்கும்.

"என்னால் எந்தவிதக் கருத்தும் வெளியிடமுடியாது" என்றார் (உ-10-7)

## ஜே. ஆர். டிக்ஸிற் பேச்சு

கொழும்பு, ஜூலை 24

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் புதன் மாலை கொழும்பு திரும்பினார்.

அன்று இரவே திரு. டிக்ஸிற், ஜனாதிபதி ஜெயவர்த்தனவை சந்தித்துப் பேசினார்.

பேச்சுக்கள் சுமார் தொண்ணூறு நிமிடங்கள் இடம்பெற்றன.

பிரதமர் ராஜீவ் காந்தி கொடுத்த செய்தியை திரு. டிக்ஸிற், ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இலங்கைஅரசின் புதிய யோசனைகள் பற்றிய இந்திய நிலைப்பாட்டை திரு. டிக்ஸிற், ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு விளக்கினார்.

கூடுதல் அதிகாரங்களுடன் ஒரே தமிழ் மாநிலம் பற்றி இந்திய அரசு உயர் அதிகாரிகள் சென்னையில் தமிழர் அமைப்புகளுடன் நடத்திய பேச்சு விவரங்களையும் திரு. டிக்ஸிற் திரு. ஜெயவர்த்தனவிடம் எடுத்துச் சொன்னார்.

சந்திப்புப் பற்றிய விவரங்களை வெளியிட திரு. டிக்ஸிற் மறுத்துவிட்டார். (இ-எ)

முச்சந்தி முரளி



இந்த முறை எல்லாம் ஜெட் வேகத்திலே நடக்குதோ பின்னை ...!
காமினி போட்ட குண்டைப் பாத்தால் அப்பிடித்தான் சொல்ல வேண்டியிருக்கு......!

## பூரி, குப்தா திடீர் யாழ் விஜயம்

### நேற்று முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

இந்திய தூதரக முதலாவது செயலாளர் திரு. எச். எஸ். பூரியும், கப்டன் குப்தாவும் நேற்றுக் காலை அவசர அவசரமாக யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்களின் இந்த திடீர் விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என அறியப்படுகிறது.

அவர்கள் சில முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேசியதாக அறியவந்தது அரசியல் பேச்சுக்கள் முதன்மை இடம் பெற்ற[illegible]கிறது.

இந்திய, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் அவர்கள் உணவு விநியோகம் பற்றியும் ஆராய்ந்தனர். (உ-7)

### சுபநேரம்

24-07-1987

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:-
6. 02 முதல் 7. 32 வரை

ராகுகாலம்:-
10.32 முதல் 12.02வரை

## சுவீடிஷ் தூதர் இன்று யாழ் வருகிறார்

சுவீடிஷ் தூதுவர் இன்று காலை பலாலி வந்து சேருவார்.

இராணுவ அனுமதி கிடைப்பின், அவர் யாழ் நகருக்கும் விஜயம் செய்வார்.

யாழ் நகரில் அவர் பிரசைகள் குழுவினரையும் மற்றும் முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து உரையாடுவார் எனத் தெரியவருகிறது. (உ-7)



திரு. அலஸ் உடைந்த வார்ட்டொன்றைப் பார்த்துவிட்டுத் திரும்புகையில் பிடிக்கப்பட்ட படம். (படம்: சண். ஜோண்சன்)

# ராஜீவ் காந்தி 10நாட்களில் இங்கு வருவார்

## காமினி தகவல்

கொழும்பு, ஜூலை 24

இலங்கை இனப்பிரச்சினை குறித்து மத்தியஸ்தம் வகிக்க இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இன்னும் பத்து நாட்களில் இலங்கை வருவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்

இவ்வாறு காணி, மகாவலி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா நேற்று மாலை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அமைச்சர் காமினி தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் யோசனைகளை அரசாங்க நாடாளுமன்றக் குழு ஏற்றுக் கொண்டுவிட்டது.

இதனை பிரதமர்ராஜீவ் காந்திக்கு அறிவிக்க கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் இன்று வெள்ளிக்கிழமை புதுடில்லி புறப்படுகின்றார்.

அடுத்த பத்துத் தினங்களுக்குள் கொழும்புக்கு விஜயம் செய்ய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சம்மதித்துள்ளார். (அ-எ)

## வடக்கு-கிழக்கு இணைப்பு நாட்டுக்குப் பேரழிவு

### நாடாளுமன்றத்தில் அனுரா

கொழும்பு, ஜூலை 24

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து தனி மாகாண சபை அமைக்க அரசு தீர்மானித்துவிட்டதா? அப்படி தீர்மானித்து இருப்பின் அது நாட்டுக்குப் பேரழிவையே கொண்டுவரும்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டார நாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நடந்த அவசரகாலச் சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு திரு. அனுரா பண்டார நாயக்கா பேசினார்.

அப்போதே அவர் முன் கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

திரு. அனுரா பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

குண்டுவெடிப்புச் சம்பவங்கள், படுகொலைகளில் எத்தனையோ சிங்களவர் உயிரைத் தியாகம் செய்து விட்டனர்.

வடக்கு - கிழக்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 2 வாரத்தினுள் உடன்படிக்கை

### ஜே. ஆர். கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 24

இரண்டு வாரகாலத்தினுள் சமாதான உடன்படிக்கை கைச்சாத்தாகலாம்.

- இப்படி தம்மைச் சந்தித்த கிழக்குமாகாண எம்பிக்களிடம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்ததாக அறியப்படுகிறது.

வடக்கு, கிழக்கு இணைப்பு முஸ்லிம்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாது.

முஸ்லிம்கள் விரும்பாவிடில் ஒருவருட காலத்தினுள் நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பு மூலம் தமது விருப்பத்தைத் தெரிவித்து இணைப்பிலிருந்து வெளியேறலாம்.

வடக்கு, கிழக்கு இணைப்பை தமிழ்ப் போராளிகளும், இந்தியப் பிரதமரும் வரவேற்றிருக்கின்றார்கள்.

இணக்கம் காணப்பட்டால் பாக்கு நீரிணையூடாக தீவிரவாதிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

கலட்டியில்

# எஞ்சியிருந்த வயோதிபரும் வெளியேறினர்

வடமராட்சி, ஜூலை24 கரவெட்டியில் உள்ள கலட்டி கிராமத்தில் இருந்து அனேகமாக குடிமக்கள் முழுப்பேரும் வெளியேறிவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் இராணுவ நடமாட்டம் இல்லாததால் வயோதிபர்கள் உட்பட சில பொது மக்கள் அங்கு வசித்து வந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் அப்பகுதியை முற்றுகையிட்ட இராணுவத்தினர் பல வயோதிபர்களைத் தாக்கினர். இருஇளைஞர்களைக் கைது செய்தபோதிலும் விசாரணையின் பின்னர் விடுதலை செய்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து எஞ்சி இருந்தோரும் கலட்டியில்இருந்து வெளியேறி அச்சுவேலி புத்தூர் போன்ற இடங்களை வந்தடைந்துள்ளனர். (இ-160)

## மருத்துவ சங்க வருடாந்த கூட்டத்தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை24 யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் வருடாந்த கூட்டத்தொடர் இன்று 24 ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை யாழ் வைத்தியசாலையில் அமைந்திருக்கும் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறும்.

இக்கூட்டத் தொடரில் 20 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன.

யாழ் பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பிற்பகல் 2.00 மணிக்கு வைபவ ரீதியாகக் கூட்டத்தை ஆரம்பித்து வைப்பார்.

கூட்டத் தொடரின் முக்கிய நிகழ்ச்சியாக 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு டாக்டர் பசுபதி ஞாபகார்த்த உரை நடைபெறும். இவ்வுரையை யாழ் மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் நிகழ்த்துவார். (இ-10)

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### தவறிவிட்டது

441280939V இலக்கமுடைய எனது அடையாள அட்டையும் டயறியும் 19-07-1987 அன்று நல்லூருக்கும் யாழ் பல்கலைக்கழகத்திற்கும் இடையில்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பலவாணர் தில்லையம்பலம்,அராலிதெற்கு, அராலி என்னும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1299)

### விற்பனைக்கு

மைனர் கார் ஒன்று விற்பனைக்குண்டு. இல. EL6048. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி க. யோகலிங்கம், மல்லாகம் ஸ்ரேஷனடி, (மில்) (1356)

நல்ல சுற்றுடலில் பருத்தித்துறை வீதி, பலாலி வீதிக்கு அண்மையில் பாதுகாப்பான இடத்தில் யாழ் நகர பஸ் நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் மின்சாரம், நல்ல தண்ணீர், பைப் வசதிகளுடன் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. டிஸ்பென்சரி, ரியூட்டரி, தொழிலகங்களாகவும், கந்தோராகவும் பாவிப்பதற்கு ஏற்ற இடம். விபரங்களுக்கு: 53/6, அன்னசத்திரலேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (1353)

## நான்காவது நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு 20-4-1966

★ ★

ஆள்பவன் அழிப்பு 24.7.1983.

செல்வன்

### செந்திநாதன் ஜயேந்திரன்

எமதினிய அன்பு மகனே! ஜயே! கற்கும் ஆசையால் கல்வி நிலையம் சென்றாய். ஆளும் அரக்கர் புத்தம் பரவிய தீவினில் பூரணை நாளில் உம்மை இடைமறித்து உமதுயிரைப் பறித்தனரே. இந்நாளில் உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் துயருறும்

அப்பா, அம்மா, அண்ணுமார், அக்கா, தம்பி, மைத்துனர், மைத்துனி.

''திருவேரகம்'' 24-7-1987. (1290)

# பிரயாண ஒழுங்குகள் HORIZON ENTERPRISES

நாம் பிரதி வாரந்தோறும் பிரயாணம் செய்வோரின் பெயர் விபரங்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றோம்.

## குவைத், மாலைதீவு, பாஹ்ரெயின், சவூதி அரேபியா

முதலான மத்திய கிழக்கு நாடுகளுக்கான அனைத்து வேலை வாய்ப்புகளுக்கு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்

அவ்வப்பகுதி மக்களின் வசதிகளை முன்னிட்டு 2 கிளைக் காரியாலயங்கள் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விலாசம்:

R. குணரத்தினராசா
கண்டி வீதி, கொடிகாமம்,
(கொடிகாமம் புகையிரதநிலையம் முன்பாக)

இலியாஸ் ஏபிரகாம் A. P.
இரண்டாம் வட்டாரம், அல்லைப்பிட்டி-

## ★ A. பத்மதாஸ் ★

### 97/1 பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

கடிதமூலம் தொடர்புகொள்ள விரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்புகொள்ளவும்.

★ நேரில் தொடர்புகொள்வோர் காலை 8-00 மணி முதல் மாலை 6-00 மணி வரையுள்ள காரியாலய நேரத்தில் சந்திக்கவும்

1987 தை மாதம் முதல் சென்ற மாதக் கடைசி வரையில் எம்மால் பிரயாணம் மேற்கொண்டோர் பெயர் விபரங்கள்:-

1. பொன்னன் குலசிங்கம் - யாக்கரு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
2. சந்தியாப்பிள்ளை அகஸ்ரின் ஞானப்பிரகாசம் - பெரியவிளான், இளவாலை.
3. மடுத்தீன் தேவதாஸ் - வட்டார இல 8,புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
4. பேறுது செபஸ்தியாம்பிள்ளை - வட்டார இல 10,பாத்திமா றோட், புதுக்குடியிருப்பு.
5. திருநாவுக்கரசு வல்லிபுரம் - இமையாணன், உடுப்பிட்டி.
6. சுப்பிரமணியம் ரவீந்திரன் - 122, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
7. மயிலு வயிரமுத்து கந்தசாமி - நெல்லியடி கரவெட்டி.
8. பிலிப் வின்சென்ற் மரியதாஸ் - இல. 11, றெக்கிளமேசன் றோட், யாழ்ப்பாணம்.
9. சிவப்பிரகாசம் ஆனந்தராசா - வட்டார இல.7, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
10. சூசைப்பிள்ளை அமலராஜா - வட்டார இல. 8, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
11. செபஸ்தியாம் பிள்ளை அடைக்கலமுத்து - இணுவில் மேற்கு, இணுவில்.
12. சின்னையா மகாலிங்கம் - கச்சேரி றோட், அல்லாரை தெற்கு, மீசாலை.
13. குணரட்ணம் சிவராசா - வீமன்காமம், தெல்லிப்பழை.
14. செபஸ்தியன் யோசெப் இராசேந்திரம் - மந்திகை,பருத்தித்துறை.
15. இரத்தினசிங்கம் பகீரதன் - பருத்தித்துறை வீதி, பொலிகண்டி.
16. வீரவாகு பற்குணம் - காங்கேசன்துறை வீதி, நந்தாவில், கொக்குவில்.
17. ஜேம்ஸ் பவஸ்ரின் இராசநாயகம் - இளவாலை மேற்கு, இளவாலை.
18. சண்முகம் பாஸ்கரன் - வட்டார இல. 6. புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
19. யாகுப் செல்வஜினதாஸ் - வட்டார இல. 5, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
20. கந்தையா ஞானசூரியர் - கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
21. இராசலிங்கம் விஜேந்திரன் - இல. 145, சுண்டிக்குளி றோட், கொழும்புத்துறை.
22. ஐயம்பிள்ளை சுப்பிரமணியம் இராசேந்திரன் - இல, 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
23. பரராசசிங்கம் குணசீலன் - வட்டார இல, 6, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
24. கந்தையா ரவீந்திரதாஸ் - கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
25. முருகன் ராமு நாகராசா - பாடசாலை ஒழுங்கை, நவாலி தெற்கு, மானிப்பாய்.
26. கணபதிப்பிள்ளை குணம் - கச்சாய் தெற்கு, கொடிகாமம்.
27. தாவீது அன்றூ - வட்டார இல.8,புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
28. பொன்னுத்துரை கணேசலிங்கம் - ஐயனார்கோவில் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
29. சின்னத்துரை தம்பிராசா - சோலையக்கட்டு, மல்லாகம்.
30. கோணலிஸ் எட்வேட் பெர்ணன்டோ - வட்டார இல 2. புங்குடுதீவு.
31. வடிவேல் யோகேஸ்வரன் - கச்சாய் தெற்கு, அம்மன் கோவிலடி கொடிகாமம்.
32. சின்னத்துரை இராசேந்திரம் - அல்லாரை மேற்கு, மீசாலை.
33. கணபதி இராசையா குணராசா - 70/1. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
34. செல்வன் சிவானந்தன் - 354, செல்வபுரம், உரும்பிராய் தெற்கு உரும்பிராய்.
35. சுப்பிரமணியம் அழகரட்ணம் - வட்டார இல. 7, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
36. தருமலிங்கம் சந்திரகாந்தன் - பெரியவிளான், இளவாலை.
37. சுப்பிரமணியம் சிவபாலன் - பிள்ளையார் வளவு, கரணவாய் வடக்கு, கரவெட்டி.
38. மாதன் சின்னக்கிளி - சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.
39. சின்னத்துரை குகநாதன் - வெடியரசன் வீதி, காரைநகர்.
40. இளையவன் மாதன் பாலசுந்தரம் - சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
41. மகாலிங்கம் நகுலேந்திரன் - ஐங்கரன் தெரு, மானிப்பாய் தெற்கு, சுதுமலை.
42. நகுலன் தவச்செல்வம். - உடுப்பிட்டி றோட், தொண்டமானாறு.
43. அழகர்சாமி கந்தசாமி - 9/2, வெள்ளான் தெரு. யாழ்ப்பாணம்.
44. ராஜதுரை கந்தசாமி - 38, முருகமூர்த்தி றோட், வண்ணார்பண்ணை.
45 வன்னியசிங்கம் தேவராஜா - துன்னாலை தெற்கு, கரவெட்டி.
46. நாகேந்திரம் வைத்தி பாலசுப்பிரமணியம் - டச்றோட், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
47. நல்லதம்பி மகேந்திரகுமார் - வட்டார, இல. 2, நெடுந்தீவு மேற்கு நெடுந்தீவு.
48. கந்தசாமி தவராசா - துன்னாலை தெற்கு, கரவெட்டி.
49. கந்தசாமி குஞ்சிதபாதம் - குலபன் கலட்டி, இடைக்காடு, அச்சுவேலி.
50. கதிரவேலு கருணாநிதி - காளிகோவிலடி,பத்தைமேனி அச்சுவேலி.
51. தம்பிராசா வசந்தராசா - புலவனூர் ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
52. தம்பிமுத்து அமரசிங்கம் - விளையாட்டுமைதான றோட், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
53. செல்லன் [illegible] - அரசடி ஒழுங்கை, சுதுமலை தெற்கு, [illegible]ப்பாய்.
54. சுப்பிரமணியம் [illegible] - [illegible] கொழும்புத்துறை.
55. யோசப் மேரிமில்டா - 15, செபஸ்ரியன் றோட். குருநகர், யாழ்ப்பாணம்.
56. வேலாயுதம் சோதிமணி - பார் லேன், தெல்லிப்பழை.
57. நடராசா லலிதாம்பிகை - சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
58. ஐயம்பிள்ளை சத்தியவதி - ஈஸ்வரிவாசா, கட்டுக்கேணிலேன், சாவகச்சேரி.
59. ராகினி இராசரட்ணம் - சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
60. ஞானமுத்து செபஞானமலர் - அம்மன்வீதி, பண்டத்தரிப்பு.
61. தங்கராசா மலர் - புளியடி லேன், தபாற்கந்தோர் றோட், சாவகச்சேரி.
62. கலைநிதி குலசேகரம் - தபாற்கந்தோர் றோட், சாவகச்சேரி.
63. ராஜதுரை கருணாவதி - கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
64. கணேசன் கலாரஞ்சன் - சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்.
65. நாகலிங்கம் பாலகிருஸ்ணன் - தாவாலை, இயற்றாலை, வரணி.
66. வீரவாகு அன்னராசா - பாரதி றோட், கம்பர்மலை, வல்வெட்டித்துறை.
67. சிவக்கொழுந்து மனோகரன் - போக்காலை லேன், உடுப்பிட்டி.
68. வல்லிபுரம் வரதன் - 325/2. நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
69. ராயப்பு குணதாஸ் - நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை.
70. தங்கத்துரை நேசராஜா - வட்டுமேற்கு. வட்டுக்கோட்டை.
71. அலோசியஸ் ஜேசுதாஸ் - 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
72. ஐயாத்துரை யோகராசா - கரவெட்டியம்பதி, வதிரி, கரவெட்டி.
73. வல்லிபுரம் சிவகுணராசா - வீரக்கேணியடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
74. மரியதாஸ் ஹனிஸ்ரர் - இல. 79, பீச் றோட், யாழ்ப்பாணம்.
75. சேவையர் ஹஸ்ரின் - உப்பளம், ஆனையிறவு.
76. தம்பையா சற்குணநாதன் - நாராயணன் லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
77. அந்தோனி ஆபிரகாம்லிங்கன் - 12, சென்ஜேம்ஸ் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
78. பேதுறு தேவநாயகம் - நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை.
79. பெனடிக்ற் அன்ரன் சுதாகர்- 99/9, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்.
80. அல்பேர்ட் அஞ்சலன்ஸ் - காம் றோட், ஊர்காவற்றுறை.
81. பத்திநாதர் அன்ரன் - பெரியவிளான், இளவாலை.
82. செல்லையா விமலச்சந்திரன் - நல்லூர், பூநகரி.
83. இராமலிங்கம் பாலசுந்தரம் - நல்லூர், பூநகரி.
84. அந்தோனி கிறிஸ்ரி சேவியர் - கிரிமலை றோட், பண்டத்தரிப்பு.
85. கிறிஸ்ரின் அன்ரனிதாஸ் - 12/2,கெனடி லேன், நாவாந்துறை.
86. அந்தோனிப்பிள்ளை டொன்பொஸ்கோ - வட்டார இல. 8, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
87. சிவலிங்கம் சுபாஸ்கரன் - உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
88. கதிரவேலு கிருஷ்ணபிள்ளை - தாவாலை, இயற்றாலை, வரணி.
89. பரஞ்சோதி உதயகுமார் - நாவலடி ஒழுங்கை, மயிலிட்டி.
90. கந்தையா முருகையா . வட்டார இல. 2, சரவணை மேற்கு, வேலணை.
91. இளையதம்பி பிறேமசந்துரு - 'ஈஸ்வரிவாசா' கட்டுக்கேணி ஒழுங்கை, சாவகச்சேரி.
92. கதிரவேலு கந்தசாமி - கைதடி தெற்கு, கைதடி.
93. சற்குணம் அரசரட்ணம் - பெரியவிளான், இளவாலை.
94. நடேசராசா நவரட்ணராசா - இல. 26, கனகரத்தினம் றோட், அரியாலை.
95. தம்பையா ரவிச்சந்திரன் - 'திருமகள் ஸ்ரோர்ஸ்' கண்டி றோட், ஆனந்தபுரம், கிளிநொச்சி.
96. யோசேப் பெர்ணன்டோ - கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.
97. சரவணமுத்து ஜெயமோகன் - காளிகோவிலடி, பத்தமேனி. அச்சுவேலி.
98. தெட்சணாமூர்த்தி பத்மநாதன் - கந்தசாமி கோவிலடி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
99. முருகேசு அரியநாயகம் - 22, திருமகள் றோட், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
100. அரியகுட்டி பரமலிங்கம் - ஆவரங்கால் தெற்கு, புத்தூர்.
101. தங்கமயில் பத்மநாதன் - வண்ணாங்குளம், முல்லைத்தீவு.
102. ஜோர்ஜ் யோசெப் - வைரவர் கோவிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
103. கந்தையா சின்னத்தம்பி - புலோலி தெற்கு, புலோலி.
104. கனகராசா திருஞானவதி - சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
105. சோமசுந்தரம் சோமாதேவி - கூழாவடி கிழக்குலேன், ஆனைக்கோட்டை.
106. அகிலேசன் குமாரசாமி - தாவலை, இயற்றாலை, வரணி.
107. இராசேந்திரம் யோகநாதன் - பனிப்புலம், சுழிபுரம்.
108. பாவிலு அன்ரன் ஜேசுராசா - நல்லையன் றோட், இளவாலை.
109. எட்வின் பெரரா வின்சன்ட் பெரரா - பாடசாலை லேன், வண்ணார்பண்ணை மேற்கு, ஆனைக்கோட்டை வடக்கு.
110. பிலிப் றிச்சாட் - மாதகல் மேற்கு, மாதகல்.
111. வைத்திலிங்கம் சுப்பிரமணியம் - 37, E. Y. S. மிருசுவில்.
112. கனகசபை மகேந்திரன் - வேலணை மத்தி கிளினிக், வேலணை.
113. வேலாயுதம் ரகுநாதன் - வட்டார இல. 8, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
114. வேலுப்பிள்ளை உதயகுமாரன் - நெடுங்குளம் றோட், கொழும்புத்துறை.
115. சுப்பையா மகேந்திரன் - ஏழாலை, மேற்கு ஏழாலை.
116. குமாரசாமி தில்லைநாதன் - 21, சுப்பிரமணியம் றோட், அரியாலை.
117. ராமசாமி நந்தகுமாரன் - கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை.
118. நல்லமுத்து யோசெப் தருமலிங்கம் - ஊரெழுமேற்கு, சுன்னாகம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டு சபபலைச் செலுத்துங்கள்; ஆனால் மண்ணை மறந்து விடாதீர்கள்.

— சி. எச். ஸ்பேர்ஜன்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805 22073
யாழ்ப்பாணம்.
24.07.1987 த.பெ.இல: - 23

## அமெரிக்க - பாக். நெருக்கடி

அமெரிக்கா — பாகிஸ்தான் உறவில் விரிசல் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் மெது மெதுவாக அதிகரித்து வருகின்றன.

தென்னாசியாவில் தனது கால்களைப் பதிப்பதற்கான பிரதான தளமாகப் பாகிஸ்தானை அமெரிக்கா கருதி வந்தது.

சோவியத் ரஷ்யாவின் நட்பு நாடாக இந்தியா விளங்குவது பரம இரகசியம். எனவே சோவியத்துக்குப் போட்டியாக தென்னாசியாவில் தான் கால் கொள்வதற்கு, இந்தியாவின் பரம விரோதியாகச் செயற்படும் பாகிஸ்தானைத் தவிர வேறு பொருத்தமான நாடு இல்லை என்று அமெரிக்கா கணக்குப்போட்டது.

சீனாவும் இந்திய விரோத நாடாக இருந்தாலும் அதன் சித்தாந்தங்களும், கொள்கைகளும் அமெரிக்காவுக்கு முற்றும் நேர்மாறானவை. ஆகையால் அமெரிக்காவின் அன்புக்கும், ஆதரவுக்கும் ஆளாகும் வாய்ப்பு பாகிஸ்தானுக்கு உண்டாயிற்று.

அதன் காரணமாக அமெரிக்காவிடம் இருந்து நிதி மற்றும் விஞ்ஞான, தொழில் நுட்ப உதவிகள் அதற்குத் தாராளமாகக் கிடைத்தன.

சும்மா இருந்து பிறர் பொருளைச் சாப்பிடும்போது எல்லையில்லாத ஆசைகள் வரும், அந்த விதத்தில் தான் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஆசை பாகிஸ்தானுக்கு வந்திருக்க வேண்டும்.

நாட்டின் கைத்தொழில் விஞ்ஞான, விவசாயத்துறை வளர்ச்சிகளுக்காகவே அணு சக்தியைத் தாம் பயன்படுத்துவதாக அதிபர் ஸியா உல் ஹக்கும், பிரதமர் முகமட் கான் ஜுனஜோவும் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும் போது எல்லாம் கூறி வந்தனர்.

ஆனால் அணுகுண்டு செய்வதில் அவர்கள் ஆர்வம் மட்டும் காட்டவில்லை, செயலளவிலும் இப்போது இறங்கியிருக்கிறார்கள் என்ற சந்தேகத்தை உண்டுபண்ணும் விதத்தில் ஒரு வாரத்திற்கு முன்னர் சம்பவம் ஒன்று நடந்தது.

கனடாப் பிரசையாக இருக்கும் பாகிஸ்தானியர் ஒருவர், அணுகுண்டு தயாரிக்சப் பயன்படுத்தப்படும் விசேஷ எஃகுப் பொருளை, அமெரிக்காவில் இருந்து கடத்த முயற்சித்த சம்பவமே சந்தேகத்தைக் கொடுத்தது. அமெரிக்க பாகிஸ்தான் நட்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சம்பவமாக அது மாறிவிட்டது.

அதைத் தொடர்ந்து உதவிகளை நிறுத்தப் போவதாக பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கும் விடயம் சின்ன விவகாரம் அல்ல என்பதை எடுத்துக் காட்டுவது போல, அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் ஜனாதிபதி ஷியா உல் ஹக்கை நேரில் சந்திக்க இம்மாத இறுதியில் ராவல் பிண்டி வருகிறார்.

இதேவேளை, பாகிஸ்தானுக்கான உதவியை உடனடியாகக் குறைக்க வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுக் குழுத்தலைவர் திரு. ஸ்டீபன் சோலார்ஸ் அமெரிக்காவைக் கேட்டிருக்கிறார். அதற்கு அமெரிக்க செனட்டர்கள் பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மொத்தத்தில் அமெரிக்க - பாகிஸ்தான் உறவுகள் சீர்குலையும் கட்டம் உருவாகி வருகிறது.

இதனை ஸ்ரீலங்கா அறிந்துகொண்டுதான், ஸ்ரீலங்கா இந்தியாவின் உதவியுடன் இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாகக் காட்டிக் கொள்ளும் அணுகுமுறைக்கு மாறி இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

எனினும், இந்தியாவின் மற்றொரு எதிரி நாடான சீனாவின் உதவியைப் பெறுவதற்காகக் காலத்தை வாங்கும் முயற்சியே ஜே. ஆரின் புதிய அணுகுமுறை என்றும் சில அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதுவரை காலமும், இலங்கை - பாகிஸ்தான் - இஸ்ரவேல் - அமெரிக்கா என்ற அச்சில் நின்றே இனப்பிரச்சினையை ஜே. ஆர். கையாண்டு வந்தார். அதில் சிறு மாற்றம் செய்யவேண்டி உள்ளது. அதற்குச் சில காலம் எடுக்கலாம். அதனால்தான் இந்தியாவுடன் சேர்ந்து போகும் புதிய அணுகு முறையைத் தற்காலிகமாகக் கௌவிப் பிடிப்பதாகக் காட்டிக்கொள்கிறார் என்ற வியாக்கியானமும் உண்டு.

எது எப்படியோ எல்லாம் இந்தியாவின் ராஜதந்திரத்திலும், மதி நுட்பத்திலும்தான் தங்கியுள்ளது; இந்தியாவுக்கு வெற்றி என்றால் தமிழர்களுக்கும் வெற்றி என்ற அர்த்தம்!

## மீண்டும் குடியமர்வு

திருகோணமலை ஜூலை23

திருகோணமலைமாவட்டத்தில் 1985 ஆகஸ்டில் உப்புவெளி, மூன்றாம் கட்டை, முருகாபுரி, குதிரைக்குண்டு ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் பழைய இடங்களில் குடியமர ஆரம்பித்துள்ளனர்.

அவர்களுக்கு ஒரு மாதத்துக்கு இலவச உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப் படுகின்றன. அத்துடன் 2 ஆயிரத்து 500 ரூபா பணமும் வழங்கப்படுகின்றது. (உ-எ-150)

❖ வளைகுடாவில் அமெரிக்கக் கொடியுடன்

# குவைத்எண்ணெய்க்கப்பல்கள் தொடர்ந்து செல்கின்றன

## ஐ. நா. தீர்மானத்துக்கு ஈராக் வரவேற்பு

பஹ்ரைன், ஜூலை 23

வளைகுடாவை நோக்கி இரண்டு குவைத் எண்ணெய்க் கப்பல்கள் அமெரிக்கக் கொடியுடன் சென்று கொண்டிருக்கின்றன.

இவற்றுக்கு அமெரிக்க யுத்தக் கப்பல்கள் இரண்டு பாதுகாப்பாகச் செல்கின்றன.

அமெரிக்க யுத்தக் கப்பல்களுக்கு அமெரிக்க விமானங்கள் ஆகாய பாதுகாப்பு வழங்குகின்றன.

அமெரிக்கக் கொடியுடன் செல்லும் கப்பல்களைத் தாக்கப்போவதாக ஈரான் எச்சரித்திருந்தும் இன்னும் அப்படியான சம்பவங்கள் எதுவும் இதுவரை இடம் பெறவில்லை.

ஈரான் ஏவுகணைகளைப் பொருத்தியுள்ள ஹோர்மூஸ் முனையூடாக இரண்டு குவைத் கப்பல்களும் அமெரிக்க யுத்தக் கப்பல்களுடன் வளைகுடாவினுள்பிரவேசித்து விட்டன.

இதனிடையில் வளைகுடாபற்றி இரண்டு வல்லரசுகளும் நேரடிப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்ற சோவியத் யூனியனின் ஆலோசனையை அமெரிக்கா நிராகரித்து விட்டது.

அதேவேளை ஐ. நா. பாதுகாப்புச் சபையின் யுத்த நிறுத்தத் தீர்மானத்தை ஈராக் வெகுவாக வரவேற்றுள்ளது.

தீர்மானத்தைச்செயல்படுத்த ஐ. நா. வுடன் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் ஈராக் அறிவித்துள்ளது. (இ-எ)

## சிலிண்டர் வெடித்ததில் 9 பேர் பலி!

பெங்களூர், ஜூலை 23

சிந்துனூரில் இடம் பெற்ற காஸ் சிலிண்டர் வெடிவிபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்; நூற்றுக்கு மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

உணவு விடுதி ஒன்றில் நான்கு காஸ் சிலிண்டர்கள் ஒரே நேரத்தில் வெடித்தன.

இதனால் அவ்விடுதி தரை மட்டமாகியது.

உள்ளே இருந்தவர்களில் எட்டுப்பேர் அந்த இடத்தில் உயிரிழந்தனர்.

ஒரு ஏழு வயதுச் சிறுமி கூட்டத்தின் நெரிசலில் சிக்கி உயிரிழந்தாள்.

வெடிச் சத்தத்தைக் கேட்டு கட்டடத்தை நோக்கி ஓடிய மக்கள் தீக்காயங்களுக்குள்ளானார்கள். (இ-எ)

## பிஜி பழங்குடிகளின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கக் கோரிக்கை

சுவா, ஜூலை 23

பிஜியின் ஆட்சிஉரிமை பிஜி பழங்குடி மக்களுக்கு இருக்கக் கூடியதாக நாடாளுமன்றப் பிரதிநிதிகளை அதிகரிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

பழங்குடித் தலைவர்களின் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

50 சதவீதமானோரான இந்தியருக்கு ஆட்சி உரிமை கிடைக்காதவாறு நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

இதன்படிபுதிய நாடாளுமன்றத்தில் தேர்தலில் இந்தியருக்கு 22 எம்பி பதவிகள் கிடைக்கும்.

பிஜி இனத்தவருக்கும் 22 எம்பி பதவிகள் தேர்தலில் கிடைக்கும்.

பின்னர் பிஜி பழங்குடித்தலைவர்கள் பத்து பிஜி இனத்தவரை எம்பிக்களாக நியமிப்பர்.

இதன் மூலம் பிஜி இனத்தவரின் ஆட்சி உரிமை உறுதி செய்யப்படும்— (இ-எ)

## கண்ணிவெடி: 22 பயணிகள் உயிரிழப்பு

காபூல், ஜூலை 23

நிலக் கண்ணி வெடித் தாக்குதலில் பஸ் ஒன்று சிக்கியதால் 22 பயணிகள் உயிரிழந்த சம்பவம் காபூலில் கடந்த செவ்வாய் இடம்பெற்றது.

ஆப்கான் கிளர்ச்சிக் காரர்களே இதற்குக் காரணம் என்று அறிவிக்கப் படுகின்றது (இ-எ)

வெளி உலகில்

## இலங்கை அகதிகளின் நடவடிக்கையால் ஊர்வாசிகள் அதிருப்தி

மண்டபம், ஜூலை 23

மண்டபம் முகாமில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கும் ஊர்வாசிகளுக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் தோன்றியுள்ளனவாம்.

தமிழ் அகதிகளின் வருகையால் தங்கள் பொருளாதாரம் பதிக்கப்படுவதாக ஊர்மக்கள் கவலைப் படுகின்றனர்—

இப்படி ''இந்து'' செய்தி வெளியிட்டுள்ளது.

மண்டபம் பகுதி நிலைமை இலங்கை அகதிகளுக்கு அத்துபடியாகி விட்டது.

லொத்தர் விற்பனை நிலையங்கள், தேநீர்க் கடைகள், பலசரக்கு வர்த்தக நிலையங்களை முகாம் அருகில் அகதிகள் நடத்துகின்றனர்.

இன்னும் சில அகதிகள் வட்டிக்குப் பணம் கடனாகக் கொடுப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.

1984 இல் அகதியாக வந்து முகாமில் தங்கி உள்ள ஒரு குடும்பம், இரண்டு உல்லாசப் பயண பஸ்களுக்குச் சொந்தக்காரராக மாறியுள்ளது.

அகதிகள் வருகையால் மீன் விலையும் உயர்ந்து விட்டது. இலங்கை அகதிகள் நன்றாக மீன் சாப்பிடுவார்கள். ஆதலால் கூடுதல் விலை கொடுத்து மீன் வாங்குகின்றார்கள்.

இது ஊர்வாசிகள். ஹோட்டல்காரர்களுக்கு ஆத்திரத்தைக் கொடுத்துள்ளது.

இப்படி ''இந்து'' செய்தி தெரிவிக்கின்றது. (இ-எ)

## மே. வங்காளம் பிரிக்கப்பட மாட்டாது

புதுடில்லி, ஜூலை23

மேற்கு வங்காளம் எக் காரணம் கொண்டும் இரண்டாகப்பிரிக்கப்பட மாட்டாது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த புதன் தெளிவாகக் கூறி விட்டார்.

மேற்கு வங்காளத்தில் உள்ள டார்ஜிலிங்மாவட்டத்தை கூர்க்காலந்தாக பிரகடனப்படுத்தப் பட வேண்டும் என்ற கூர்க்காலந்துதேசியவிடுதலை முன்னணியின் கோரிக்கை குறித்து புதன் புதுடில்லியில்பேச்சுக்கள் தொடங்கின. அப்போதே பிரதமர் இதனை அறிவித்தார். (இ-எ)

## தீர்வு காண்பதில் உள்ள கஷ்டத்தை பிரேமா விளக்குகிறார்

டோக்கியோ, ஜூலை 23

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஏன் கஷ்டமாக உள்ளது என்பதை பிரதமர் திரு. பிரேமதாச விளக்கி உள்ளார்.

பிரதமர் பிரேமதாச டோக்கியோவில் வைத்து இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் நாகசோனியைச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பரிமாணத்தை இனப்பிரச்சினை பெற்றுள்ள காரணத்தினால் தான் தீர்வு காணுவது கஷ்டமாக உள்ளது.

ஆகவே சர்வதேசதீவிரவாதத்தை அனைத்துநாடுகளும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் —என்று பிரதமர் சொன்னார். (அ-எ)

# விமானம் மூலம் பொதிபோட்ட நடவடிக்கை சூழ்நிலையை மாற்றிவிட்டது

புதிய யோசனை இன்னும் முறையாக கடதாசி வடிவில் முன்வைக்கப்படவில்லை.

புதிய யோசனை இன்னும் விளக்க ரூபத்தில் தான் உள்ளது என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருந்தும் சில விவரங்கள் இந்தியத் தூதருடன் பேசித் தயாரிக்கப் பட்டுள்ளன.

வியாழன் கொழும்பில் 12 அமைச்சர்களுடன் நடந்த சந்திப்பில், என்ன நடக்கின்றது, அதன் தேவை என்ன என்பவை பற்றி விளக்கப்பட்டன.

புதிய யோசனையை மக்கள் ஏற்க வைப்பதற்கு அரசு தனது சக்தி அனைத்தையும் திரட்ட வேண்டியுள்ளது.

### பிரேமாவின் கருத்து

இந்த இடத்தில் பிரதமர் பிரேமதாசாவின் கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

மாகாண சபையிலும் பார்க்க தனது பிரதேச சபைகள் முன்னேற்றமானவை என்று பிரதமர் கருதுகின்றார்.

இந்தியாவுடன் தான் அவருக்கு ஆழமான பிரச்சினை.

'ஜனாதிபதி பிரபாகரனுடன் பேச்சுக்கள் நடத்துவதை ஆட்சேபிக்க மாட்டேன். ஆனால் இந்தியாவை ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட வேண்டும்''

—இப்படி பிரதமர் தனது சகா ஒருவரிடம் சொன்னார்.

ஆகவே எதிர்வரும் 25 இல் பிரதமர் நாடு திரும்பும் வரை புதிய யோசனை குறித்து திடமான முடிவு எடுக்கப் படமாட்டாது.

### முஸ்லிம் பிரச்சினை

முஸ்லிம்களின் பிரச்சினை தான் அடுத்த கேள்வி.

தமிழரின் ஆதிக்கத்தை கிழக்கிலங்கை முஸ்லிம்கள் எதிர்க்கின்றார்களா? என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியாது.

ஆனால் கொழும்பைத் தளமாகக் கொண்ட முஸ்லிம் தலைவர்கள் பெருத்த சத்தம் போடுவர் என்பதை மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம்.

ஒரு முஸ்லிம் அமைச்சர் சொன்னார். ஒரு சமூகத்துக்காக இன்னொரு சமூகத்தின் நலன்களைத் தியாகம் செய்வதல்ல அரசின் நோக்கம். முஸ்லிம்களின் நலன்களைச் சட்டபூர்வமாகப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன'—

இப்படி அவர் சொன்னார்.

உத்தேச திட்டத்தின்படி வடமாகாண சபையிம் 36 உறுப்பினர்கள் இருப்பர். கிழக்கு மாகாண சபையில் 35 உறுப்பினர் இருப்பர்.

'வடக்கு— கிழக்குக்கான புதிய போர் மூலா'—

இத்தலைப்பில் திரு. காட்றி இஸ்மாயில் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் எழுதிய கண்ணோட்டத்தின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

1981 சனத்தொகை கணக்கெடுப்பின்படி வடமாகாணத்தில் மக்கள் எண்ணிக்கை 11.1 லட்சம். கிழக்கு மாகாணத்தில் 9 லட்சத்து 80 ஆயிரம்.

தேர்தலில் தமிழர் வாக்குகள் இரண்டாகப் பிரிந்துவிடும்என்றே சிறுபான்மையினர் நம்புகின்றனர்.

ஓராண்டின் பின்னர் தான் வடமாகாணத்துடன் முழுதாக இணைந்துவிடுவதா என்பதைத்தீர்மானிக்கும் சர்வசன வாக்கெடுப்பு கிழக்கில் நடத்தப்படும்.

உடனடி இணைப்பு இல்லாமல் தாமதமாக நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பு பூரண இணைப்பு இடம்பெறும் என்பதை - உறுதிப்படுத்துகின்றதாக தமிழர் தரப்பினர் கருதுகின்றனர்.

தாமதமாக நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பு, தமிழர் தம்மை நல்லபடி நடத்த உதவும் என்று சிறுபான்மையோர் அபிப்பிராயப்படுகின்றனர்.

புதிய யோசனையில் இன்னும் பல கேள்விகளுக்கு விடை காண வேண்டியுள்ளது. முழு விஷயமும் அமுல்நடத்துவதில்தான் தங்கியுள்ளது.

### சிங்கள அகதிகள் நிலை

அச்சத்தில் வெளியேறிய சிங்கள அகதிகளின் நிலை என்ன? மாகாண சபைத்தேர்தல் எப்படி நடைபெறும்?

சிங்கள எதிர்க் கட்சிகளின் அரசியல் எதிர்ப்பை எப்படி அரசு எதிர்நோக்கப்போகின்றது?

எதிர்க்கட்சிகளின் பிளவினால் அரசு நன்மையடைந்தாலும் இடதுசாரிக்கட்சிகள் கொள்கையளவில் புதிய யோசனையை எதிர்க்க முடியாது.

இடதுசாரிகள் இது விஷயத்தில் ஒரேவித கொள்கையைக் கடைப்பிடித்து வந்ததாகக் கூற முடியாது.

1968இல் டல்லி — செல்வா உடன்படிக்கையைக் கிழித்தெறிய வைத்த 'மசாலவடை' போக்கை இடதுசாரிகள் மீண்டும் புதுப்பிக்கமுடியும்.

எனினும் சுதந்திரக் கட்சி தனித்து நின்று தனது எதிர்ப்புப் பிரசாரத்தை வெற்றிகரமாக நடத்தமுடியும் மகாசங்கத்தின் உதவியுடன்.

புதிய யோசனையை மகாசங்கம் நிச்சயமாக எதிர்க்கும்.

திட்டவட்டமான உடன்பாடு காணப்பட்டு கையெழுத்திடப்பட்டாகவேண்டும்.

இணைப்புசி, திம்பு, பெங்களூர், டிசம்பர் 19 யோசனை - இவை எல்லாம் இனப் பிரச்சினைப் பேச்சுக்களில் பெரும் முன்னேற்றமாகக் கருதப்பட்டன.

பின்னர் எல்லாம் உடைந்து விழுந்து விட்டன.

இந்தமுறை இந்திய விமான மூலம் உணவுப் பொதி போட்ட செயல் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வுகள் எல்லாம் சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்றை ஏற்டுத்தியுள்ளன.

அடிக்கடி சமாதானத்துக்கு மிக நெருங்கிவந்துள்ளோம்.

ஆகவே நம்பிக்கையை அதிகம் வளர்த்துக் கொண்டு ஏன் மீண்டும் ஏமாற்றம்அடையவேண்டும்! (முற்றும்)

## றெனிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை23

யாழ் தமிழர்முன்னேற்றக் சமூகம் நிதி அமைச்சர் றெனி டி மெல்லுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில் எதிர் காலத்தில் மோதல் ஏற்படாமல் இருக்க நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்; அத்தீர்வின்கீழ் தமிழருக்கு ஒன்று, சிங்களவருக்கு ஒன்றுஎன இரண்டு நாடுகள் அமைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (இ-எ)

# 10 அருள் கட்டளைகள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அருளியவை.

ஞானக்கதிர்

1. காலையில் எழுந்தவுடன் கடவுளை இரண்டு நிமிடங்களாவது மனத்தில் நினைத்துப் பிரார்த்தனை செய்க.

2. அன்றைய நாள் நல்லதாக இருக்க இறைவனிடம் வேண்டிக் கொள்க.

3. அடுத்து புண்ணிய நதிகள், கோமாதா சிரஞ்சிவிகள், சப்த ரிஷியர்கள் முதலியவர்களை குறைந்த பட்சம் ஒரு நிமிடமாவதுநினைக்க வேண்டும்.

4. வாரத்தில் ஒரு நாளாவது அருகிலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபட வேண்டும்.

5. உன் பக்கத்தில் வாழ்பவர்களையும் மற்றவர்களையும் நேசிக்க வேண்டும்.

6. சாப்பிட முன்னர் மிருகங்களுக்கோ பட்சிகளுக்கோ ஆகாரம் அளித்து விட்டுப் பிறகு சாப்பிடவும்.

7. அன்றாடம் குறைந்த பட்சம் சக்திக்கேற்றபடி தருமம் செய்க.

8. [illegible] இலகம் வைத்துக் [illegible]

9. உறங்கச் செல்லு முன் அன்றைய நாளில் நீ செய்த நல்லவை கெட்டவைகளை எண்ணிப் பார்க்கவும்.

10. ஆண்டவன் நாமத்தை 108 முறை உச்சரித்துவிட்டுப் பின்பு உறங்குக.



தொகுப்பு: பரமேஸ்வரி சிவராமலிங்கம்



## பொய்யாமொழி

குறள்:

நன்மையும் தீமையும் நாடிநலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

பொருள்:

நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் (செயலுக்கு உரியவனாக) ஆளப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bitsmans Institutes
MANIPAY.
88 A/L சேதன இரசாயனம்
(ORGANIC)
ஆசிரியர்: திரு. மகாதேவா B Sc. (Hons)
ஆரம்பம்: 25-07-87 Sat 12-30 p m

# உதயன்

24 07-1987 வெள்ளிக்கிழமை

Bitsmans Institutes
MANIPAY.
89 A/L பொது இரசாயனம்
(GENERAL CHEMISTRY)
ஆசிரியர்:
திரு. தில்லைநாதன் B. Sc. (Hons)
ஆரம்பம்: 24-7-87 வெள்ளி 4 30 p. m.



திரு. அலஸ் ஆஸ்பத்திரி வீதியில் நின்று யாழ் ஆஸ்பத்திரியின் வரை படத்துடன் இடங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறார். அருகில் நிற்பவர்கள்;- தலைமைப்பீட உதவி அரச அதிபர், யாழ் அரச அதிபர், யாழ் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர். (படம்: சண். ஜோண்சன்)

# ஜனாதிபதி தலைமையில்

## தேசிய ஒருமைப்பாட்டுக் குழு

### இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அஞ்சல் சங்கம் ஆலோசனை

வவுனியா ஜூலை 24

சகல கட்சிகளும் அடங்கிய, ஜனாதிபதி தலைமையிலான தேசிய ஒருமைப்பாட்டுக் குழு ஒன்றை அமைத்து இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண அரசாங்கம் முன்வர வேண்டும்.

இவ்வாறு அஞ்சல் தொலைதொடர்பு சேவையாளர் சங்கம் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

நாட்டில் அழிவையும் மரணத்தையும் மட்டும் அன்றி மக்கள் மீது பெரும் சுமையையும் ஏற்றி வரும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகஜர் ஒன்றின் மூலம் பிரஸ்தாப சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஏனைய ஆலோசனைகள் வருமாறு:-

★ இனப்பிரச்சினைப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

★ இனப் பிரச்சினைத் தீர்வை அமுல் படுத்தியவுடன் நாட்டில்பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

★ அரசியல், தொழிற் சங்க வாதிகள் அனைவரும் விடுதலை செய்யப் படவேண்டும்.

★ மக்கள் விடுதலை முன்னணி மீதான தடையை நீக்கி, அவர்களும் தேர்தலில் பங்குகொள்ள வழி ஏற்படுத்த வேண்டும.

★ 1980 ஆண்டின் பொதுவேலை நிறுத்தக் காரர்கள் அனைவருக்கும் நிபந்தனையின்றி வேலை வழங்க வேண்டும்.

★ வேலை வங்கி முறை நீக்கப்பட்டு பாகுபாடின்றி போட்டிப் பரீட்சைமூலம் தொழில் வழங்க வேண்டும்.

★ சகல மாணவர்களுக்கும், தமிழையும் சிங்களத்தையும் கட்டாய பாடமாக்க வேண்டும்.

★ ஊழலற்ற நியாயமான நிர்வாகத்தை அமைப்பதற்காக, அரசியல்வாதிகள், பொதுச் சேவையாளர், தொழிற் சங்கவாதிகள் ஆகியோர் புதிதாக தேடிய செல்வங்களைப்பற்றி விசாரிக்கவும் பரிந்துரை வழங்கவும் ஏதுவாக தேசிய குழு ஒன்று அமைக்கப் பட வேண்டும். (இ-161)

# கல்விப் பகுதிக்கு வந்து திரும்பும்

## வடமராட்சி பரீட்சார்த்திகள்

வடமராட்சியைச் சேர்ந்த மாணவிகள், மாணவர்கள் நாளை நடக்கும் ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றுவது குறித்துப் பெரும் குழப்ப நிலையில் உள்ளனர்.

வடமராட்சியைச் சேர்ந்த பரீட்சார்த்திகளில் சுமார் 70 சதவீதமானவர்கள் அப் பகுதிக்கு வெளியே அகதிகளாகவும், உறவினர் வீடுகளிலும் வசிக்கிறார்கள்.

ஆனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பரீட்சை அனுமதிப் பத்திரங்களில் வடமராட்சிப் பரீட்சை நிலையங்களே குறிக்கப் பட்டுள்ளன.

எனினும் வடமராட்சி சென்று பரீட்சைக்குத் தோற்றாமல் வாபஸ் பெறவே பெரும்பாலான பரீட்சார்த்திகள் விரும்புகிறார்கள். ஆனால் அதற்கான அத்தாட்சிப்படுத்தும் ஒப்பத்தை பாடசாலை அதிபர்களிடம் இருந்து பெறுவது கஷ்டமாக உள்ளது.

அதிபர்கள் கல்வித் திணைக்களம் வரக்கூடும் என எதிர்பார்த்து பல மாணவ மாணவிகள் அங்கு வந்து ஏமாற்றத்துடன் செல்கிறார்கள்.

# பல்கலைக் கழக மாணவர்கள் இன்று மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று விரிவுரைகளை பகிஷ்கரித்து, மறியல் போராட்டம் நடத்துவர்.

இதுசம்பந்தமான கூட்டம் ஒன்று காலை 9 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

யாழ் மருத்துவ மாணவர் ஒன்றியம் இதனை அறிவித்துள்ளது. (இ-7)



19 ஆம் வார்ட்டில் விழுந்த ஷெல் கொங்கிறீட் தளத்தில் ஏற்படுத்திய துவாரம், கூரையில் ஏற்படுத்திய துவாரத்தில் இருந்து நிலத்திற்குச் செங்குத்தாக எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதை அளக்கப்பட்ட போது எடுக்கப் பட்ட படம். (படம்: சண் ஜோண்சன்)

# காரியத்தில் கண்ணாக இருந்த ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 24

நேற்று யாழ்ப்பாணம் வந்த தனிநபர் ஆணைக் குழுவின் ஆணையாளர் திரு. அலஸ் ஒரு நிமிட நேரத்தையும் வீணாக்காமல் காரியத்தில் கண்ணாய் இருந்தார்.

சாப்பாட்டைக்கூட மிக குறுகிய நேரத்தில் முடித்துக்கொண்டு, ஓய்வு ஏதும் எடுக்காமல் விசாரணையை ஆரம்பிக்க கச்சேரிக்கு விரைந்து சென்றார் அவர். (உ-7)

# இன்றும் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 24

அலஸ் ஆணைக்குழுவின் அமர்வு இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

ஆஸ்பத்திரி மீதான ஷெல் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர்கள், இறந்தவர்களின் உறவினர்கள் ஆகியோரது சாட்சியங்கள் இன்று பதிவு செய்யப்படும்

இருபத்தைந்திற்கு மேற்பட்டவர்கள் இன்று சாட்சியமளிப்பர். (உ-7)

# லங்கா சிமெந்து ஊழியர் வேலைக்குத் திரும்ப மறுப்பு

## உயிருக்கு உத்தரவாதம் கேட்கின்றனர்

யாழ்ப்பாணம், ஜூலை 24

லங்கா சிமெந்து ஊழியர்கள் தங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் மீண்டும் வேலைக்கு செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் முன்றலில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

தொழிற்சாலையின் எழுபத்தைந்து சத வீதமான மக்கள் தொழிற்சாலைக்கு அண்மையில் உள்ள வதிவிடங்களில் வாழ்ந்து வந்தவர்கள்.

தற்சமயம் அப்பகுதியில் இராணுவம் முகாமிட்டுள்ளதால் அப்பகுதியில் வாழ்ந்த ஊழியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப வசதி ஏற்படுமானால் ஊழியர்கள் வேலைக்கு செல்ல வசதி ஏற்படும்.

இவ்வாறு லங்கா சிமெந்து லிமிட்டெட் ஊழியர் நலன்புரிச் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# புலோலி ப. நோ. கூ சவில் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

உடுப்பிட்டி கிராம வங்கியில் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம், இம் மாதம் முதல் புலோலி ப. நோ. கூ. சங்கக் கிளையின் மூலம் வழங்கப் படும். (இ-7)

# பரத நடன பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்மாவட்ட கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் பரத நடனப் பயிற்சி வகுப்புகள் நாளை சனிக்கிழமைமுதல் யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பபாடசாலையில் நடைபெறும்.

இந்த வகுப்புகள் இது வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வந்தன

இந்த கல்லூரி மண்டபத்தில் நாளைமுதல் ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சைகள் நடைபெற இருப்பதனாலேயே வகுப்புகள் இடமாற்றப்பட்டுள்ளன — என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியரும் வேலைக்குத் திரும்ப மறுப்பு

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களும்வேலைக்குத் திரும்ப மறுத்துவிட்டனர்.

நேற்று சுன்னாகம் ஐயனார் கோவிலடியில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதில்லை என முடிவு செய்தனர்.

காங்கேசன் துறைப் பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறும்வரை வேலைக்குச் செல்வதில்லை என நேற்றைய கூட்டத்தில் பேசிய தொழிலாளர்கள் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

காங்கேசன்துறைமுகத்திலும், மகஸினிலும் இராணுவம் குடிகொண்டிருந்த போது - சுயேச்சையாக வேலை செய்ய முடியாது என்ற காரணத்தினால் - தொழிலாளர் வேலைக்குச் செல்லாது விட்டனர்.

ஆனால் இப்போது பல முனைகளிலும் இராணுவம் முன்னேறியிருக்கும் போது வேலைக்கு எப்படிச் செல்லமுடியும்? சுயேச்சையாக எப்படி வேலை செய்யமுடியும்?

—இப்படி நேற்றைய கூட்டத்தில் தொழிலாளர்கள் பலரும் கேள்வி எழுப்பினர். (உ-68)

# அதிசக்தி வாய்ந்த...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர் துருவித் துருவிச் சேகரித்தார். உள்ளூர் பத்திரிகைப் படப்பிடிப்பாளர் ஒருவர் மூலம் தமக்குத் தேவையான படங்களை அவர் எடுத்துக் கொண்டார்.

அதன் பின்னர் 19 ஆம் வார்ட் தாக்குதலின் போது காயமடைந்து இடது கால், இடது கை செயலிழந்த நிலையில் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கும் முன்னாள் ஆசிரியர் சதாசிவம் கணேசன் (வயது 60 கல்வியங்காடு) என்பவரின் சாட்சியத்தை திரு அலஸ் பதிவு செய்தார்.

தனியறையில் இது இடம் பெற்றது.

அதன் பின்னர், யாழ் ஆஸ்பத்திரியில் இது வரைகாலமும் விழுந்த ஷெல் குண்டுகளின் மிச்சங்களை வைத்தியப் பணிப்பாளர் அறையில் பார்வையிட்டார். அவற்றை மிக நுணுக்கமாகச் சோதனை செய்த அவர் அவற்றைப் பொதியாகக் கட்டி தம்முடன் எடுத்துச் சென்றார்.

பின்னர் அரச அதிபருடனும் ஏனையோருடனும் சென்று சேதமடைந்திருக்கும் யாழ் நகரின் சில பகுதிகளை அவர் பார்வையிட்டார்.

நேற்றுப் பிற்பகல் 2-15 முதல் மாலைவரை யாழ் செயலகத்தில் ஆணைக்குழுவின் அமர்வு நடைபெற்றது.

டாக்டர்கள் திரு. சிவராஜா, திரு. கணேசரட்ணம், செல்வி. குருசாமி, செல்வி. இரத்தினம், செல்வி. சிவபாதசுந்தரம், செல்வி. நாகராஜா ஆகியோரினதும்—

ஆஸ்பத்திரி ஊழியர்கள் திரு. வி. சின்னத்தம்பி, திரு. கே. சிவஞானம் ஆகியோரினதும் சாட்சியங்களை திரு அலஸ் பதிவு செய்தார். யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் நேற்று ஆணைக்குழுமுன் சாட்சியமளித்தார். (உ-7)

# வடக்கு கிழக்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இணைத்து தனி மாகாண சபை ஒன்றைத் தமிழருக்கு வழங்குவது அத்தியாகத்தை அவமதிப்பதாகவே அமையும்.

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ)

# 2 வாரத்தினுள்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்கள் கடத்துவதை இந்தியாவே கண்காணிக்கும்.

- இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேகருத்தை அமைச்சர் அத்துலத் முதலியும் நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். (உ)

# பிரயாண ஒழுங்குகள்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

119. சின்னத்துரை தெய்வேந்திரம் - கட்டுவன் மேற்கு.தெல்லிப்பழை.
120. சுப்பிரமணியம் ஆனந்தன் - இடைக்காடு, அச்சுவேலி.
121. பாலசிங்கம் ஸ்ரீபாஸ்கரன் - ஏழாலை மேற்கு, ஏழாலை.
122. நல்லையா கிருஷ்ணகுமார் - மானிப்பாய் வடகிழக்கு,மானிப்பாய்.
123. நவரெத்தினம் தயாபரன் - கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
124. தொம்மை அன்ரன் ஜெனராசன் - பெரியவிளான், இளவாலை.
125. கந்தையா அநந்தவநாதன் - நவாலி கிழக்கு, மானிப்பாய்.
126. சுப்பிரமணியம் சிவானந்தராசா - சமாதி கோவிலடி,குப்பிளான், ஏழாலை.
127. காசிலிங்கம் ஜெகநாதன் - ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
128. பரம்சோதி பிறேமசிறி - 114/1 கச்சேரி, நல்லூர்ரோட், யாழ்ப்பாணம்.
129. சீனியர் இராமநாதன் - அச்செழு வடக்கு, நீர்வேலி.
130. கந்தையா சதாசிவம் - சென் அன்ரனி லேன், வட்டார இல. 2, புங்குடுதீவு.
131. முருகன் சுந்தரலிங்கம் - அலியாவத்தை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
132. பொன்னையா யோகராஜா - வட்டார இல. 6, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
133. இராசன் இளங்கோவன் - 670, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
134. பாவிலுப்பிள்ளை சூசைப்பிள்ளை - 35 A.சோமசுந்தரம் அவென்யூ, யாழ்ப்பாணம்.
135. தில்லையம்பலம் சண்முகம் பிள்ளை - 157, ஸ்கந்தபுரம் கிளிநொச்சி.
136. கந்தையா துரைராஜா கரம்பன் மேற்கு, ஊர்காவற்துறை.
137. முருகேசு மகேஸ்வரி - கல்லடி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
138 செல்லையா ரங்கநாதன் - 3 B, பாரதி லேன்,கச்சேரி,நல்லூர் ரோட், யாழ்ப்பாணம்.
139, அருளப்பு மரியநாயகம் - வெள்ளான் போக்கடி, கொடிகாமம்.
140. வைத்திலிங்கம் பாலசிங்கம் - வெடியரசன் வீதி, காரைநகர்.
141. இராமகிருஷ்ணன் ஸ்ரீஸ்கந்தராசன் - 128, கொலனிகுடியேற்றம், திருநெல்வேலி, கோப்பாய்.
142, சங்கரப்பிள்ளை சிறிநாதன் - யாழ்-வீதி, வயாவிளான்.
143. பெர்னாந்து யோசெப் இராசநாயகம் - பெரியவிளான்,இளவாலை.

# ஷெல் வந்த...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் வந்த திசையை ஊகிப்பது அவரது நோக்கமாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆஸ்பத்திரி வரைபடத்தை திறந்துவைத்துக் கொண்டு கோட்டை இராணுவ முகாம் எந்தத் திசையில் இருக்கின்றது என ஆணையாளர் அலஸ், வைத்தியப்பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியனிடம் கேட்டார்.

வைத்தியப் பணிப்பாளரும் அவருடன் கூட இருந்த டாக்டர் சிர்மாறனும் கோட்டை முகாம் இருந்த திக்கை வரைபடத்தில் சுட்டிக்காட்டினார்கள்.

இரண்டு துவாரங்களும் குறிக்கும் நேர்கோட்டில்தான்முகாம் இருப்பதை அவர்கள் காட்டிய போது—

ஆணையாளர் அலஸ் வார்ட் யன்னல் வழியாக வீதியையும் கட்டடங்களையும் எட்டிப்பார்த்து தமது வரைபடம் சரியாக வைக்கப் பட்டிருக்கின்றதா என்பதை [illegible]

தொலைத்தொடர்பு நிலைய கோபுரத்தின் திசையை [illegible] வைத்தியப் பணிப்பாளர் காட்டினரா என்பதையும் அவர் உறுதிப்படுத்திக்கொண்டார். (உ-7)

# குருநகர் யாகப்பர் ஆலய உற்சவம்

குருநகர், ஜூலை 24

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். நற்கருணை விழாவுடனும் நாளை சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்து சிறப்பிக்கும் திருநாள் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப ஆசீர்வாதம் வழங்கப்படுவதுடன் நிறைவடையும்.

## மேசன் வேலை பயிற்சி

இளைஞர்களை தகைமையும் திறமையும் உள்ள மேசன் தொழிலாளராக புதிய கட்டிட நிர்மாண முறைகளில் நேரடிப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பெறும் தகுதியில் பயிற்சி நெறிகள் அமைந்துள்ளன.

22 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும் / உடன் வரவும்.

பயிற்சி ஆரம்பம் - 29 - 07 - 1987
பயிலுனருக்கு ரூபா 10/- - 30/- வரை நாளாந்தப்படி வழங்கப்படும்

பணிப்பாளர்:
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை.

Bitsmans Institutes
Manipay
பிரிவு 2 | 89 A/L ஒளியியல்
88 A/L வெப்பவியல்
ஆசிரியர்: திரு. சௌந்தி B. Sc. (Hons)
ஆரம்பம்: 25 . 07 . 1987. Sat. 6.30 a. m.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 24-07 1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Friday July 24 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org